செ.வெ.எண்: 04/2018 நாள்: 05.01.2018

# பத்திரிகை செய்தி

## ஓகி புயலால் பாதிப்புக்குள்ளான விடுபட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

********

ஓகி புயலால் கன்னியாகுமரி மாவட்டத்தில் 33 சதவீதத்துக்கு அதிகமாக வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு பயிர் சேதம் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்கெடுப்பில் விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை இடுபொருள் மானியம் பெற ஆதார் எண், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், அலைபேசி எண், நிலவரி ரசீது நகல் அல்லது குத்தகைக்கான விபரம் ஆகியவற்றோடு இதுவரை விபரம் தெரிவிக்காத விவசாயிகள் உடனடியாக தங்களது பகுதியின் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலரை தொடர்புகொண்டு விபரங்களை தெரிவித்து நிவாரணம் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்
நாகர்கோவில்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.